ராமநாதபுரம் மாவட்டத்தில் மாநில நல்லாசிரியர் விருதுக்கு 12 பேர் தேர்வு

மாநில நல்லாசிரியர் விருதுக்கு தேர்வான முதுகுளத்தூர் அரசுப் பள்ளி ஆசிரியர் நீ.மங்களநாதன், பாம்பன் சின்னப்பாலம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி தலைமையாசிரியை ராம. செல்லம்மாள் ஆகியோருக்கு சான்றிதழ், பதக்கத்தை சனிக்கிழமை வழங்கிய அமைச்சர் ராஜ்மோகன்.

கமுதி/ராமேசுவரம், செப்.5: ராமநாதபுரம் மாவட்டத்தில் தமிழக அரசின் மாநில நல்லாசிரியர் விருதுக்கு தேர்வான 12 பேருக்கு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன் சனிக்கிழமை சான்றிதழ், பதக்கங்களை வழங்கிப் பாராட்டினார்.

ராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் தொழிற்கல்வி ஆசிரியராக நீ.மங்களநாதன் (56) பணியாற்றி வருகிறார்.

இவர் ராமநாதபுரம் மாவட்ட நாட்டு நலப்பணித் திட்ட தொடர்பு அலுவலராகவும் பொறுப்பு வகித்து வருகிறார்.

இவர் மாவட்டம் முழுவதும் பள்ளி, கல்லூரிகளில் மாணவ, மாணவிகள், பொதுமக்கள் மத்தியில் அரசு சார்பில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தினார்.

இந்த நிலையில், தமிழக அரசின் டாக்டர் ராதாகிருஷ்ணன் மாநில நல்லாசிரியர் விருதுக்கு, ராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து முதுகுளத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் நீ. மங்களநாதன், சாயல்குடி அரசு தொடக்கப் பள்ளி தலைமையாசிரியை பா.கீதாரமணி, பாம்பன் சின்னப்பாலம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியையாக இராம.செல்லம்மாள் உள்பட 12 ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

இவர்களுக்கு சென்னையில் பள்ளிக் கல்வித்துறை சார்பில் சனிக்கிழமை நடைபெற்ற ஆசிரியர் தின விழா நிகழ்ச்சியில் அமைச்சர் ராஜ்மோகன் சான்றிதழ், பதக்கங்களை வழங்கிப் பாராட்டினார்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் வ.உ.சி. பிறந்த நாள்

அமைச்சர் வி.கே.ராஜீவ் மரியாதை

ராமேசுவரத்தில் வ.உ.சி. பிறந்த நாளையொட்டி, சனிக்கிழமை பொதுமக்களுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்கிய அகில இந்திய வ.உ.சி. பேரவையினர். (வலது) கமுதியில் வ.உ.சி. உருவப் படத்துக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய அகில இந்திய வ.உ.சி. பேரவையினர்.

ராமேசுவரம்/கமுதி/ பரமக்குடி, செப். 5: வ.உ.சி. பிறந்த நாளையொட்டி, ராமநாதபுரம் அரண்மனை முன் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது உருவப் படத்துக்கு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத் துறை அமைச்சர் வி.கே. ராஜீவ், அரசியல் கட்சியினர் சனிக்கிழமை மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

ராமநாதபுரத்தில் வெள்ளாளர் முன்னேற்றக் கழகம் சார்பில், வ.உ.சி.யின் 155-ஆவது பிறந்த நாளையொட்டி, அரண்மனை முன்பாக அலங்கரிக்கப்பட்ட வைக்கப்பட்டிருந்த அவரது உருவப் படத்துக்கு அமைச்சர் வி.கே.ராஜீவ் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

முன்னதாக, அமைச்சரை ராமநாதபுரம் மாவட்ட ரியல் எஸ்டேட் சங்கத் தலைவர் ஜெயபாண்டியன், மாவட்டத் தலைவர் அஜித்குமார், நகரத் தலைவர் சுந்தரராஜன், மாவட்டச் செயலர் மனோஜ்குமார் ஆகியோர் வரவேற்றனர்.

இதைத் தொடர்ந்து, திமுக சார்பில் ராமநாதபுரம் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம், தவெக கிழக்கு மாவட்டச் செயலர் மலர்விழி ஜெயபாலா, வர்த்தக அணி அமைப்பாளர் தொழிலதிபர் கார்த்திக், சுற்றுச்சூழல் அமைப்பாளர் விமலா, ராமநாதபுரம் அரண்மனை இளையமன்னர் நான்காம் தமிழ் சங்கத் தலைவர் நாகேந்திர சேதுபதி, பாஜக சார்பில் வழக்குரைஞர் சண்முகநாதன், நகர் மன்ற உறுப்பினர் குமார், காங்கிரஸ் சார்பில் மாவட்ட தலைவர் ராஜாராம் பாண்டியன், நகரத் தலைவர் கோபி, அதிமுக சார்பில் மண்டபம் மேற்கு ஒன்றியச் செயலர் ஆர்.ஜி. மருதுபாண்டியன், மாணவரணி செயலர் வழக்குரைஞர் செந்தில்குமார், தகவல் தொழில்நுட்ப அணி மாவட்டச் செயலர் நாகராஜன் ராஜா, யாதவர் சங்கம் சார்பில் மாநிலப் பொதுச் செயலர் வேலு மனோகரன் ஆகியோர் வ.உ.சி. உருவப் படத்துக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

ராமேசுவரத்தில் அகில இந்திய வ.உ.சி. பேரவை சார்பில், சிவாஸ்ரமம் மடத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த வ.உ.சி. உருவப் படத்துக்கு மாலை அணிவித்து மாரியதை செலுத்தப்பட்டது. பின்னர், 100-க்கும் மேற்பட்டவர்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

முன்னதாக, இந்த நிகழ்வுக்கு மாநிலச் செயற்குழு உறுப்பினர் சூரியபிரகாஷ் தலைமை வகித்தார். மாவட்டத் தலைவர் என். வேடராஜன் முன்னிலை வகித்தார். இதில் நிர்வாகிகள், முக்கிய பிரமுகர்கள் தவமணி, லதா, சரவணன், செல்வக்குமார், செந்தில், ரமேஷ், கண்ணன், சேதுராமன், ரவி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கமுதி: கமுதி பெருமாள் கோயில் அருகே கமுதி நகர் வெள்ளாளர் உறவின்முறை தலைவர் முத்துப்பாண்டி தலைமையில் செயலர் ஆறுமுகம், பொருளாளர் முருகராஜ் ஆகியோரது முன்னிலையில் வ.உ.சி. உருவப் படத்துக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

சாயல்குடி: சாயல்குடி காவல் நிலையம் அருகே வ.உ.சி. உருவப் படத்துக்கு வெள்ளாளர் உறவின் முறை சார்பில், அந்தச் சங்கத்தின் தலைவர் முனியசாமி, செயலர் பாலமுருகன், பொருளாளர் செல்லப்பா திருஞானசம்பந்த மூர்த்தி ஆகியோரது முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து, வ.உ.சி. வேடமணிந்து வந்த குழந்தைகள், பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு பரிசுப் பொருள்கள் வழங்கப்பட்டது. இதில் பத்திர எழுத்தர் சமரசம் ந.மணிகண்டன், சொக்கலிங்கம், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

பரமக்குடி: பரமக்குடி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன் அமைந்துள்ள வ.உ.சி. யின் உருவச் சிலைக்கு அனைத்து வெள்ளாளர் மகாசபை சார்பில், அதன் தலைவர் டி.கார்த்திகேயன் தலைமையில் நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

வ.உ.சி. மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியர் தினம், வ.உ.சி. பிறந்த நாள் விழா இருளப்பன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு முனியாண்டி பிள்ளை, பாஸ்கர சேதுபதி, மகேஸ்வரன், லோகநாதன், தாமோதரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பின்னர், பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பன்னீர்செல்வம் பரிசுகளை வழங்கிப் பாராட்டினார்.

இதைத் தொடர்ந்து, பள்ளி மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. விழாவில் அனைத்து வெள்ளாளர் மகாசபை நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். முன்னதாக, சவரிமுத்து பிள்ளை வரவேற்றார். கோவிந்தராஜ் நன்றி கூறினார்.

மீனாட்சி சுந்தரேசுவரர் பள்ளியில் ஆசிரியர் தின விழா

கீழச்சிவல்பட்டி மீனாட்சி சுந்தரேசுவரர் மேல்நிலைப் பள்ளியில் சனிக்கிழமை நடைபெற்ற ஆசிரியர் தின விழாவில் பேசிய சிவகங்கை வட்டாட்சியர் சாந்திமுருகப்பா.

திருப்பத்தூர், செப். 5: சிவகங்கை மாவட்டம், கீழச்சிவல்பட்டி மீனாட்சி சுந்தரேசுவரர் மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியர் தின விழா சனிக்கிழமை நடைபெற்றது.

இந்த விழாவுக்கு பள்ளிக் குழுத் தலைவர் எல்.லட்சுமணன் தலைமை வகித்தார். செயலர் பி.எல்.அழகுமணி கண்டன்,

பொருளாளர் டி.அங்கப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவில் சிறப்பு அழைப்பாளர்களாக சிவகங்கை வட்டாட்சியர் எம். சாந்திமுருகப்பா, முன்னாள் பள்ளித் தலைவர் ஏ.எல்.காசிவிஸ்வநாதன், முன்னாள் செயலர் எஸ்.பி.கருப்பையா, முன்னாள் மாணவர் எஸ். வள்ளியப்பன், எஸ்.முத்துராமன் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். மேலும், சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் ஆசிரியர்கள் சின்னக்கருப்பன், இளங்கோவன், மீனாட்சி, ஆகியோர் கலந்து கொண்டனர். இதைத் தொடர்ந்து ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

பின்னர், மாணவ, மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள், ஆசிரியர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. முன்னதாக, பள்ளித் தலைமை ஆசிரியர் உஷா வரவேற்றார். உதவித் தலைமை ஆசிரியர் தங்கராசு நன்றி கூறினார்.

மாப்பிள்ளை விநாயகர் மன்றத்தினர் சார்பில் ராஜபாளையத்தில் 6 பிரம்மாண்ட விநாயகர் சிலைகள்

ராஜபாளையத்தில் நிர்மாணிக்கப்பட்ட விஷ்ணுவை வணங்கும் கணபதி ஈஷா சிவனை வணங்கும் கணபதி.

ராஜபாளையம், செப். 5: விருதுநகர் மாவட்டம், ராஜபாளையத்தில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு, தயார் செய்யப்பட்ட 6 பிரம்மாண்ட விநாயகர் சிலைகள் சனிக்கிழமை மாலை ஊர்வலமாக எடுத்துச் சென்று நிர்மாணிக்கப்பட்டது.

ராஜபாளையம் தர்மாபுரம் மாப்பிள்ளை விநாயகர் நற்பணி மன்றம் சார்பில் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக விநாயகர் சதுர்த்தி நாளில் பிரம்மாண்டமான விநாயகர் சிலைகள் செய்து ஊர்வலமாக எடுத்துச் செல்வது வழக்கம். இதேபோல, நிகழாண்டில் விநாயகர் சதுர்த்திக்காக சித்தி, புத்தி மகா கணபதி, ஐஸ்வர்யா கணபதி, நந்தி பகவானிடம் காதில் வேண்டும் கணபதி, விஷ்ணுவை வழிபடும் கணபதி, .ஈஷா சிவனை வழிபடும் கணபதி, ஜல்லிக்கட்டு கணபதி என 6 மிகப் பிரம்மாண்டமான விநாயகர் சிலைகள் மாயூரநாதசுவாமி கோயில் அருகேயுள்ள ஆதி வழிவிடும் விநாயகர் கோயிலில் தயார் செய்யப்பட்டன. இந்தச் சிலைகளை ஊர்வலமாக மதுரை சாலை, பஞ்சு மார்க்கெட் வழியாக எடுத்து வந்து வடக்கு காவல் நிலையம் அருகேயுள்ள தர்மாபுரம் மாப்பிள்ளை விநாயகர் கோயில் அருகே நிர்மாணிக்கப்பட்டது. இங்கு ஞாயிற்றுக்கிழமை முதல் விநாயகர் சதுர்த்தி வரை பல்வேறு பூஜைகள், இலவச திருமணம், நலத் திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகள் நடைபெறும். மேலும், நாள்தோறும் அன்னதானமும் நடைபெறும். விழாவுக்கான ஏற்பாடுகளை மாப்பிள்ளை விநாயகர் நற்பணி மன்றத் தலைவர் என்.எஸ் ராமராஜ் தலைமையில் நிர்வாகிகள் செய்து வருகின்றனர்.

வ.உ.சி. சிலைக்கு ஐஎன்டியூசி சார்பில் மாலை அணிவித்து மரியாதை

ஸ்ரீவில்லிபுத்தூர், செப். 5: வத்திராயிருப்பு அருகே உள்ள தம்பிபட்டி கிராமத்தில் காங்கிரஸ் கட்சியின் ஐஎன்டியூசி சார்பில் வ.உ.சி. சிலைக்கு சனிக்கிழமை மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

தம்பிபட்டி கிராமத்தில் உள்ள வ.உ.சி. சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய ஐஎன்டியூசி பொதுச் செயலர் அண்ணாதுரை.

சுதந்திரப் போராட்ட வீரர் வ.உ.சிதம்பரனாரின் பிறந்த நாளையொட்டி, வத்திராயிருப்பு வட்டம், தம்பிப்பட்டி கிராமத்தில் உள்ள அவரது உருவச் சிலைக்கு காங்கிரஸ் கட்சியின் ஐஎன்டியூசி மாநில பொதுச் செயலர் அண்ணாதுரை தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இதில் கூமாப்பட்டி பேரூராட்சி தலைவர் சுந்தரம், வர்த்தகப் பிரிவு காங்கிரஸ் முன்னாள் மாவட்டத் தலைவர் சத்தியமூர்த்தி, கிருஷ்ணாபுரம் கிராமக் குழுத் தலைவர்கள் ஆசைத்தம்பி, தம்பிபட்டி கிளைச் செயலர், ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இன்றைய நிகழ்ச்சிகள்

பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் கோயில் சதுர்த்தி 2-ஆம் நாள் திருவிழா: சுவாமி வெள்ளி கேடகத்தில் திருவீதி உலா, காலை 10. பரதநாட்டிய நிகழ்ச்சி, இரவு 7, சுவாமி சிம்ம வாகனத்தில் வீதியுலா, இரவு 8.30.

ராஜபாளையம் ஜடா முனீஸ்வரர் கோயில்: மண்டல பூஜை, காலை 10.

பொது அறிவிப்பு

எனது கட்சிக்காரர் பெயர் வெளியிடப்படவில்லை அதன் உரிமையாளர்களிடமிருந்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்தினை திரு.சங்கரலிங்கம் த/பெ.வெங்கடாசலம் மற்றும் திருமதி.அகிலாண்டம் த/பெ.சங்கரலிங்கம் அவர்களிடமிருந்து வாங்க விரும்புகிறார் என்பதை பொதுமக்களுக்கு இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. கீழ்க்கண்ட சொத்துக்களைப் பொறுத்து வேறு எவருக்கேனும் உரிமையோ, பாத்தியதையோ, ஆட்சேபனையோ, பின் தொடர்ச்சியோ, நில ஆர்ஜித நடவடிக்கைகளோ, மைனர் கிளைம், பற்றுகை உள்ளிட்ட நீதிமன்ற நடவடிக்கைகளோ, மேற்படி அசல் ஆவணத்தினை கைவசம் வைத்திருப்பவர்களோ அல்லது வேறு ஏதேனும் வில்லங்க விவகாரங்களோ இருந்தால் நாளது தேதி முதல் 7 நாட்களுக்குள் எழுத்து மூலமாக தக்க ஆதாரங்களுடன் கீழ்க்கண்ட எனது முகவரிக்கு தெரிவிக்கவும், பின்னிட்டு வரும் எந்த ஒரு ஆட்சேபனையும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது எனவும், அத்தகைய வில்லங்க விவகாரங்கள் கீழ்க்கண்ட சொத்தினை நல்லெண்ணத்தின் அடிப்படையில் கிரையம் செய்யும் எனது கட்சிக்காரை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்பதையும் இதன் மூலம் அறியவும்.

சொத்து விபரம்

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி வட்டம், பெரியகுளம் பதிவு மாவட்டம், ஆண்டிபட்டி சார்பதிவாளர் அலுவலகம், வள்ளல்நதி கிராமம். பின்வரும் சர்வே எண்களில் அமைந்துள்ள நிலங்கள். சர்வே எண்கள். 134/1, 137/1, 137/2, 137/3, 134/3, 134/2, 138/1, 138/2, 135/1A3, 135/2, 138/3, 133/3, 133/4B மற்றும் 147/1. மொத்தம் **49.10** ஏக்கர் நிலங்கள் ஆகும். இச்சொத்துடன் தொடர்புடைய வழக்கமான பொதுப்பாதை உரிமைகள், அதனுடன் இணைந்த அனைத்து உரிமைகள், சலுகைகள் மற்றும் இணை உரிமைகள், அனைத்தும் இதில் அடங்கும்.

R.V, GURUNATHAN, B.A., M.L,
ADVOCATE - En.No: 453/1996,
No: 4, 2nd Floor, India Towers Gopalapuram 2nd Street, CBE -641 018.
Cell: 9787711085. rvglegalconsultants@gmail.com

ஹோமி பாபா அறிவியல் கல்வி மையம்
டாடா அடிப்படை ஆராய்ச்சி நிலையம்

தேசிய ஒலிம்பியாட் போட்டி 2026-2027

வானியல், உயிரியல், ரசாயனவியல், இயற்பியல், இளநிலை அறிவியல் ஆகியவற்றில்

இப்போட்டியில் பங்கேற்க விரும்பும் மாணவர்கள் அனைவரும் இந்திய இயற்பியல் ஆசிரியர்கள் சங்கத்தால் (IAPT) 2026 நவம்பர் 21 மற்றும் 22 ஆம் நாள்களில் நடத்தப்படும் தொடர்புடைய தேசிய தரநிலை தேர்வுகளில் (NSEs) (அறிவியல் பாடங்களுக்கானது) கண்டிப்பாக கலந்து கொள்ள வேண்டும்.

NSE-இல் தகுதி பெறுவதே தொடர்புடைய சர்வதேச ஒலிம்பியாட்ஸ் -2027-இல் கலந்து கொள்வதற்கான முதல்படி ஆகும்.

பதிவுக்கு:

NSEs: https://www.iapt.org.in (ஆகஸ்ட் 21 - செப்டம்பர் 14, 2026)

மேலும் விபரங்களுக்கு: **https://olympiads.hbcse.tifr.res.in**
https://www.iapt.org.in

CBC 48143/11/0006/2627

BHARAT HEAVY ELECTRICALS LIMITED
Tiruchirappalli – 620014
(A Govt. of India Undertaking)

APPRENTICESHIP TRAINING 2026-27
* ITI * DIPLOMA * GRADUATE

BHEL, Boiler Plant Trichy **invites ambitious candidates to apply for Apprenticeship Training 2026-27.**
We offer an excellent opportunity for **Training** and **Skill Enhancement** under the Apprenticeship Program.

BENEFITS

Attractive Stipend | Placement Assistance | Hostel Accommodation | Subsidized Food

For detailed advertisement, registration and submission of application, please visit:
https://trichy.bhel.com

Application Opened On	:	14/08/2026
Closing of Application	:	12/09/2026

Any corrigendum will be published on BHEL Trichy website only.

பாங்க் ஆஃப் பரோடா
बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda
India's International Bank
119 FOUNDATION YEAR LEADING WITH TRUST

பேங்க் ஆப் பரோடா

கிளை : ROSARB (பிராந்திய ஒடுக்கப்பட்ட சொத்துக்கள் வசூல் கிளை) : லோட்டஸ் சென்டர், 3வது தளம், எண்.4312/13D, VP ரத்தினசாமி ரோடு, மதுரை – 625 014, போன் : 0452–2602200, மின்னஞ்சல் : sarmdr@bankofbaroda.bank.in

அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின், விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை –IV-A (காண்க, நிபந்தனைகளின் விதி 6(2) & 8(6))

கடனீட்டு சொத்துக்கள் ஒரக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் நிதான உரிமை அமலாக்க சட்டம், 2002 பிரிவு 6(2) & 8(6)–ன் கீழ் அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின் மின்–ஏல விற்பனை அறிவிப்பு.

கீழே விவரிக்கப்பட்டுள்ள பாங்க் ஆப் பரோடா வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை வங்கி அங்கீகாரம் பெற்ற அதிகாரி கவாதீனம் எடுத்துள்ளார். இதன் மூலம் பொதுமக்கள் மற்றும் கடன்தாரர்கள், ஜாமீன்தாரர்கள், அடமானதாரர்கள் அனைவருக்கும் அறிவிப்பது என்னவென்றால், பாதுகாக்கப்பட்ட கடனீந்தவரின் அடமானத்திற்குள்ளான/ஈடு வைக்கப்பட்ட, வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் கவாதீனப் படுத்தப்பட்ட கீழே குறிப்பிட்டுள்ள சொத்து, நிலுவையை வசூலிக்க வேண்டி **"எங்கு உள்ளனவோ அந்நிலையில்", "என்ன உள்ளனவோ அப்படியே", "எப்படியுள்ளதோ அப்படியே"** மற்றும் **"பொறுப்பேற்காத நிலையில்"** எனும் முறையில், மின் ஏல விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) / உத்தரவாதமளித்தவர்(கள்) / பாதுகாக்கப்பட்ட சொத்து(க்கள்) / நிலுவைகள் / நிர்ணயிக்கப்பட்ட விலை / முன்வைப்புத் தொகை / மின் ஏலத் தேதி மற்றும் நேரம் / ஏல அதிகரிப்பு தொகை போன்ற விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

வ. எண்	கடன்தாரர்கள் / உத்தரவாதம்அளித்தவர்கள் / அடமானதாரர்கள் பெயர் மற்றும் விலாசம்	அசையாச் சொத்தின் விரிவான விபரம் வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின் அதனுடன் (உரிமையாளர் / அடமானதாரர் பெயர்)	மொத்த நிலுவைத் தொகை	மின் ஏலத் தேதி / நேரம்	1. குறைந்தபட்ச விலை, 2. முன் வைப்புத் தொகை 3. ஏல உயர்வுத் தொகை	கவாதீன நிலை (ஆக்கபூர்வ/ கொள்நிலை)	சொத்தினைப் பார்வையிடும் தேதி / நேரம்
1	1. லேட்.திரு.G.சண்முகவேல்ராஜா (காலஞ்சென்றவர்) – கடன்தாரர் மற்றும் அடமானதாரர், 9/2, மத்திநாய்க்கன்பட்டி ரோடு, அல்லம்பட்டி, விருதுநகர் – 626 001. 2. திருமதி.வசந்தி (உத்தரவாதமளித்தவர் மற்றும் லேட்.திரு.G.சண்முகவேல்ராஜாவின் சட்டபூர்வ வாரிகதாரர்), 9/2, மத்திநாய்க்கன்பட்டி ரோடு, அல்லம்பட்டி, விருதுநகர் – 626 001. 3. திருமதி.பவானி (லேட்.திரு.G.சண்முகவேல்ராஜாவின் சட்டபூர்வ வாரிகதாரர்), 9/2, மத்திநாய்க்கன்பட்டி ரோடு, அல்லம்பட்டி, விருதுநகர் – 626 001. 4. திரு.ராஜகணேஷ் (லேட்.திரு.G.சண்முகவேல்ராஜாவின் சட்டபூர்வ வாரிகதாரர்), 9/2, மத்திநாய்க்கன்பட்டி ரோடு, அல்லம்பட்டி, விருதுநகர் – 626 001. 5. திரு.லோகேஷ் ராஜா (லேட்.திரு.G.சண்முகவேல்ராஜாவின் சட்டபூர்வ வாரிகதாரர்), 9/2, மத்திநாய்க்கன்பட்டி ரோடு, அல்லம்பட்டி, விருதுநகர் – 626 001.	**சொத்து–1 :** விருதுநகர் இனை சார் பதிவு மாவட்டம் எண்.1, அல்லம்பட்டி கிராமம், சர்வே எண்.49/5 ல் அடங்கியதும் அதன் பகுதியுமான நிலம் மற்றும் கட்டிடத்தின் அளவுகளாக, மொத்தமுள்ள 2 ஏக்கர் 61 சென்டில், வடபுறமுள்ள 1 ஏக்கரில், கிழமேல் வடபுறம் –34 அடி (12 அடி அகல பொது வழித்தடத்தில் 6 அடி உள்ளிட்டு), கிழமேல் தென்புறம் – 34 அடி (12 அடி அகல பொது வழித்தடத்தில் 6 அடி உள்ளிட்டு), தென்வடல் கிழபுறம் – 16 அடி, தென்வடல் மேற்புறம் – 16 அடி, மொத்தம் 544 சதுரடிக்கு **எல்லைகள் விபரம் :** வடக்கு – சரவணகுமாரின் வீட்டு மனை, மேற்கு – விற்பனையாளர்களின் சொந்தமான நிலம், கிழக்கு – 12 அடி அகல தென்வடல் பொது வழித்தடம், தெற்கு – விற்பனையாளர்களின் சொந்தமான நிலம். தற்போது இச்சொத்து சர்வே எண்.49/5B ல், விருதுநகர் பஞ்சாயத்து யூனியனின், கூரைக்குண்டு பஞ்சாயத்தில் உள்ளது. திரு. கணேச நாடார் மகன் லேட். திரு. G.சண்முகவேல்ராஜாவின் பெயரிலமைந்த சொத்து.**வங்கிக்குத் தெரியவந்த வில்லங்க விபரம் (ஏதேனுமிருப்பின்) : NIL**
GPS ஒருங்கிணைப்புகள் (இருப்பிடக் குறிப்பிற்காக) : அட்சரேகை : N 9.570339, தீர்க்கரேகை : E 77.964552
Property ID in BAANKNET Portal: BARB602820260006

சொத்து–2 : விருதுநகர் மாவட்டம் மற்றும் தாலூகா, விருதுநகர் இனை சார் பதிவு அலுவலகம் எண்.2, விருதுநகர் பஞ்சாயத்து யூனியன், கூரைக்குண்டு பஞ்சாயத்து, கோட்டைபட்டி கிராமம், சர்வே எண்.459/2A ல் அடங்கியதும் அதன் பகுதியுமான நிலம் மற்றும் கட்டிடத்தின் அளவுகளாக, எண்கள் குறிப்பிடப்படாத லே அவுட்டில் உள்ள 1 ஏக்கர் 14 சென்டில், கிழமேல் இருபுறமும் –40 அடி, தென்வடல் கிழபுறம்– 40 அடி (வழித்தடத்தில் 10 அடி உள்ளிட்டு), தென்வடல் மேற்புறம் – 40 அடி (வழித்தடத்தில் 10 அடி உள்ளிட்டு), மொத்தம் 1600 சதுரடிக்கு **எல்லைகள் விபரம் :** வடக்கு – 20 அடி அகல கிழமேல் ரோடு, தெற்கு – ஜெயபாலன் விற்ற புஞ்சை நிலம், மேற்கு – பவானிக்குச் சொந்தமான நிலம், கிழக்கு – பவானிக்குச் சொந்தமான நிலம். இச்சொத்து திரு. கணேச நாடார் மகன் லேட். திரு. G.சண்முகவேல்ராஜாவின் பெயரிலமைந்தது.
வங்கிக்குத் தெரியவந்த வில்லங்க விபரம் (ஏதேனுமிருப்பின்) : NIL GPS ஒருங்கிணைப்புகள் (இருப்பிடக் குறிப்பிற்காக) : அட்சரேகை : N 9.564065, தீர்க்கரேகை : E 77.366048
Property ID in BAANKNET Portal: BARB602820260007 | **மொத்த நிலுவை : ரூ. 22,32,498/–; மொத்த நிலுவை : ரூ. 38,87,317/–; மொத்த நிலுவை : ரூ. 9,98,147/–; மொத்த நிலுவை : ரூ. 1,71,211/–; ஆகமொத்த நிலுவை : 05.09.2026 தேதியன்று, ரூ.72,89,173/– (ரூபாய் எழுபத்து இரண்டு லட்சத்து எண்பத்து ஒன்பதாயிரத்து நூற்று எழுபத்து மூன்று மட்டும்)** மற்றும் செலவுகள், பிற கட்டணங்களுடன். | 23.09.2026 பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை | **சொத்து எண்.1 :** 1. ரூ.14,77,000/– (ரூபாய் பதினான்கு லட்சத்து எழுபத்து ஏழாயிரம் மட்டும்) 2. ரூ.1,47,700/– (ரூபாய் ஒரு லட்சத்து நாற்பத்து ஏழாயிரத்து எழுநூறு மட்டும்) 3. ரூ.25,000/– (ரூபாய் இருபத்து ஐந்தாயிரம் மட்டும்) **சொத்து எண்.2 :** 1. ரூ.37,00,000/– (ரூபாய் முப்பத்து ஏழு லட்சம் மட்டும்) 2. ரூ.3,70,000/– (ரூபாய் மூன்று லட்சத்து எழுபதாயிரம் மட்டும்) 3. ரூ.50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) | கொள்நிலை (Physical) கவாதீனம் | 21.09.2026 காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை |
| 2 | 1. M/s.G.S.டிரேடர்ஸ் (கடன்தாரர்), உரிமையாளர் நிறுவனம் – லேட்.திரு.G.சண்முகவேல்ராஜா (காலஞ்சென்றவர்) – அடமானதாரர், 9/2, மத்திநாய்க்கன்பட்டி ரோடு, அல்லம்பட்டி, விருதுநகர் – 626 001. 2. திருமதி.வசந்தி (உத்தரவாதமளித்தவர் மற்றும் லேட். திரு.G.சண்முகவேல்ராஜாவின் சட்டபூர்வ வாரிகதாரர்), 9/2, மத்திநாய்க்கன்பட்டி ரோடு, அல்லம்பட்டி, விருதுநகர் – 626 001. 3. திருமதி.பவானி (லேட்.திரு.G.சண்முகவேல்ராஜாவின் சட்டபூர்வ வாரிகதாரர்), 9/2, மத்திநாய்க்கன்பட்டி ரோடு, அல்லம்பட்டி, விருதுநகர் – 626 001. 4. திரு.ராஜகணேஷ் (லேட்.திரு.G.சண்முகவேல்ராஜாவின் சட்டபூர்வ வாரிகதாரர்), 9/2, மத்திநாய்க்கன்பட்டி ரோடு, அல்லம்பட்டி, விருதுநகர் – 626 001. 5. திரு.லோகேஷ் ராஜா (லேட்.திரு.G.சண்முகவேல்ராஜாவின் சட்டபூர்வ வாரிகதாரர்), 9/2, மத்திநாய்க்கன்பட்டி ரோடு, அல்லம்பட்டி, விருதுநகர் – 626 001. | விருதுநகர் மாவட்டம், கூரைக்குண்டு பஞ்சாயத்து, அல்லம்பட்டி கிராமம், சர்வே எண்.52/5, உட்பிரிவு எண்.52/5A, அருப்புக்கோட்டை ரோட்டுக்குத் தெற்கில், R.S.நகர் விரிவாக்கம், ஜெய் ஹிந்து வீதி. இதிலடங்கியதும் அதன் பகுதியுமான நிலம் மற்றும் கட்டிடத்தின் 971.75 சதுரடி சொத்து. **எல்லைகள் :** வடக்கு – 15 அடி அகல கிழமேல் வழித்தடம், மேற்கு – திரு. T. பாஸ்கரின் நிலம், கிழக்கு – திரு. T. பாஸ்கரின் நிலம், தெற்கு – செந்தூராம்மாளின் புஞ்சை நிலம். இச்சொத்தானது திரு. கணேச நாடார் மகன் லேட்.திரு. G சண்முகவேல்ராஜாவின் பெயரில் உள்ளது.
வங்கிக்குத் தெரியவந்த வில்லங்க விபரம் (ஏதேனுமிருப்பின்) : NIL
GPS ஒருங்கிணைப்புகள் (இருப்பிடக் குறிப்பிற்காக) : அட்சரேகை : N 9.570228, தீர்க்கரேகை : E 77.967042
Property ID in BAANKNET Portal: BARB602820260005 | **05.09.2026 தேதியன்று, ரூ.19,73,950/– (ரூபாய் பத்தொன்பது லட்சத்து எழுபத்து மூன்றாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பது மட்டும்)** மற்றும் செலவுகள், பிற கட்டணங